பத்திரிக்கை செய்தி

மின் கம்பத்தை மாற்றி அமைக்க ரூ.15,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உதவி பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.கவிதப்பா, வெங்கடேசபுரம், சூளகிரி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் நிலத்தின் நடுவில் மின்பாதையும் மற்றும் மின் கம்பம் உள்ளது. புகார்தாரர் தன்னுடைய நிலத்தில் நடுவில் உள்ள மின்கம்பத்தை மாற்றி அமைக்கும்படி மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழக அலுவலகம், அதிமுகம், சூளகிரி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்து மின் கம்பத்தை மாற்றுவதற்குண்டான கட்டணத்தையும் செலுத்தியிருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.உதயகுமார், உதவி பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழக அலுவலகம், அதிமுகம், சூளகிரி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 10.07.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.உதயகுமார், உதவி பொறியாளர், லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.